**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 1226 of 2004**

**Date** :08.04.2026

**வா.சா. 1** ரால்ப் கிராண்ட் மதன்

**Solemnly affirmed in accordance with the Provision of Act X**

**1-வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

ஆயர் நசரின் சூசை என்பவர் சேசு சபை என்ற துறவற சபையில் துறவியாக பணியாற்றி வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி ஆயர் நசரின் சூசை 2003 முதல் 2011 வரை திரு இருதய குருத்துவ கல்லூரி பூந்தமல்லி சென்னையில் Dean of Theology ஆக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். பின்பு 2017-ம் வருடம் கோட்டார் மறைமாவட்டத்தில் ஆயராக நியமனம் செய்யப்பட்டார் என்றார் சரிதான். மேற்படி நசரின் சூசை என்பவருக்கு முன்பாக பீட்டர் ரெமிஜியஸ் என்பவர் கோட்டர் மறைமாவட்டத்தில் ஆயராக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். மேற்படி பீட்டர் ரெமிஜியஸ் 1990 முதல் 2007 வரையிலும் கும்பகோணம் மறைமாவட்டத்தில் ஆயராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான்.

இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலகட்டத்தில் மேற்படி பீட்டர் ரெமஜியஸ் கோட்டார் மறைமாவட்டத்தில் ஆயராக பணியாற்றவில்லை என்றால் சரிதான். மேற்படி பீட்டர் ரெமிஜியஸின் காலத்தில் கோட்டார் மறைமாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டது கோட்டார் மறைமாவட்டம் மற்றும் குழித்துறை மறை மாவட்டம் என்று ஆக்கப்பட்டது என்றால் சரிதான். நான் எந்த தேதியில் அருட்பணியாளராக நியமிக்கப்பட்டேன் என்றால் 15.04.2007 அன்று நியமிக்கப்பட்டேன். நான் எந்த

வருடத்தில் கார்மல் நகர் திருக்குடும்ப ஆலயத்தில் அருட்பணியாளராக நியமிக்கப்பட்டேன் என்றால் 2025-ம் வருடத்தில் மே மாதத்தில் நியமினம் செய்யப்பட்டேன்.

2025-ம் வருடத்திற்கு முன்பாக நடந்த விபரங்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாததால் இந்த வழக்கு குறித்து எனக்கு சாட்சியம் அளிக்க தெரியாது என்றால் சரியல்ல. கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கலாம். இந்த வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் ஜேசுமரியான் பங்கு பணியாளராக இருந்ததாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பிறகு பிரான்சிஸ் சேவியர், மரிய சூசை வின்செண்ட், ஜார்ஜ் பொன்னையா, மரிய வின்செண்ட், பேட்ரிக் சேவியர் மற்றும் இன்னொரு மரிய வில்சன் மற்றும் நானும் சேர்ந்து மொத்தம் 8 அருட்பணியாளர்கள் செயல்பட்டு வந்தோம் என்றால் சரிதான். இவ்வழக்கில் கார்மல் நகர் திருக்குடும்ப ஆலயத்தில் 2-வது பிரதிநிதியாக தற்போது யார் இருக்கிறார்கள் என்றால் நான் தான்.

எனக்கு முன்பாக சகாய பிரபு என்ற அருட்பணியாளர் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி கூறிய ஏழு அருட்பணியாளர்கள் 2-ம் வாதியின் பிரதிநிதியாக உள்ளதை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . அதைபோல் மேற்கூறிய எட்டு அருட்பணியாளர்களும் 2-ம் வாதி சபையில் அருட்பணியாளர்கள் என்பதை காட்டுவதற்கு எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது குறித்து தெரியவில்லை. நான் தாக்கல் செய்யவில்லை. கார்மல் நகர் திருக்குடும்ப ஆலயத்தில் அருட்பணியாளராக

நியமிக்கப்படுபவர்கள் அருட்பணி மற்றும் ஆன்மீகப்பணி செய்வதற்காக நியமிக்கப்படுகிறார்கள் என்றால் சரியல்ல. அதையும் கடந்து இதர பணிகளும் உண்டு. ஆயர் மற்றும் பங்கு அருட்பணியாளர்கள் செயல்பட வேண்டிய அருட்பணி மற்றும் ஆன்மீகப்பணி அதை எவ்வாறு ஆலயத்தில் செய்யப்பட வேண்டும் என்பவைகள் கத்தோகிக்க திருச்சபையின் கோட்பாட்டின் தொகுப்பாக இருப்பது தான் Canon Law என்றால் சரிதான். மேலும் வளர்ச்சிப்பணிக்காகவும் மேற்படி தொகுப்பு உண்டு.

ஆன்மீக அருட்பணி வழிப்பாடுகள். ஜெபங்கள் அனைத்தும் மறைமாவட்டத்தில் புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புத்தகத்தைப்பார்த்து தான் அருட்பணியாளர்கள் அவர்களது பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2025-ம் ஆண்டு மே மாதம் கார்மல் திருக்குடும்ப ஆலயத்தில் அருட்பணியாளராக நியமிக்கப்பட்டு பணிபுரிய வந்த போது ஊர் நிர்வாகிகள் மற்றும் பங்கு மக்கள் சேர்ந்து வரவேற்று அழைத்து சென்றனர் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் ஊர் நிர்வாகத்தில் தலைவராக அருள்ராஜ் செயலாளராக மெல்சன் மற்றும் பொருளராக ஜோஸ் என்பவர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அதைபோல் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக 29 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான்.

தற்போது அருட்பணியளாராக இருந்த போது தான் 2026 ஜனவரி மாதம் தேர்தல் நடைபெற்று புது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்றால் சரிதான். அதில் தற்போது தலைவராக லியோன் ஜேசுரத்தினம், செயலாளராக தனுஷ், பொருளாளராக சுரேஷ் மற்றும் 29 ஊர் நிர்வாக குழு கமிட்டிஉறுப்பினர்கள்

இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

நான் அருட்பணியாளராக வந்த பின்பு 2025 ஆகஸ்டு , நவம்பர் மற்றும் 2026 ஜனவரியில் ஊர் நிர்வாகம் சார்பில் பொதுக்குழு கூட்டம் கூட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பொதுக்குழுவில் வரவு செலவு கணக்குகள் வாசிக்கப்பட்டு அந்த பொதுக்குழுவில் அங்கீகாரமும் அளிக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 2026 ஜனவரி மாத தேர்தல் பொதுக்குழு கூட்டத்தில் ஆலய உறுப்பினர்கள் முன்னிலையில் தேர்தலும் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி பொதுக்குழு, செயற்குழு கூட்டப்பட்ட தேதிகள் குறித்து ஞாயிறு பூஜை முடிந்த பின்பு ஆலயத்தில் அறிவிப்போம் என்றால் சரிதான். அதைப்போல் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை பூஜைக்கு பின்பு நிர்வாகிகளின் வரவு செலவு, கையிருப்பு பணம் அனைத்தும் ஆலயத்தில் நான் வாசித்து ஆலய உறுப்பினர்களுக்கு தெரிவிப்பேன் என்றால் சரிதான்.

அதைபோல் ஆயர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளபடி ஒவ்வொரு மாதமும் அருட்பணியாளரின் மாத செலவுக்கு ரூபாய் பதினைந்தாயிரத்தை தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர்கள் சேர்ந்து கையெழுத்திட்ட வங்கியின் காசோலை மூலம் தருவார்கள் என்றால் சரிதான். அதைபோல பங்கு அருட்பணியார்கள் தங்கும் வீட்டிற்கான மின்சார கட்டணம், குடிநீர் கட்டணம் அனைத்தும் ஊர் நிர்வாகம் செலுத்தும் என்றால் சரிதான்.

மேலும் வீட்டினை சுத்தப்படுத்துவதற்கு வாரந்தோறும் ஊர்பணியாளர்களுக்கு

ஐநூறு ரூபாய் ஊர் நிர்வாகங்கள் கொடுக்கும்  என்றால் சரிதான்.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**